மாலை முரசு

பக்கங்கள் 17 + 3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 22 செவ்வாய்க்கிழமை 08.10.2024 | அதிர்வு 68

## திருகோணமலையில் ஆணின் சடலம் மீட்பு!

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலையைச்

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# அநுரவுடன் இணைந்து செயற்படுவோம்

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவிப்பு



“பொருளாதார வளர்ச்சி, பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஜனநாயக ஆளுகை ஆகிய பல துறைகளின் ஊடாக அமெரிக்கா, இலங்கை ஆகிய இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்வதற்காக இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம். இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் நிலையான, வளமான மற்றும் நியாயமான நாடொன்றைப் பற்றிய எதிர்பார்ப்பை அடைவதற்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பு கிட்டும்.”

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுப்பி

02

# ஐ.நா. தீர்மானத்துக்கு அநுர அரசும் எதிர்ப்பு

## போர்க் குற்ற ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறையையும் ஏற்றுக்கொள்ளாதாம்

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு தீர்மானத்தின் 51/1 நகல் வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

**இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த ஆதாரங்களைச் சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் எந்தத் தீர்மானத்தையும் இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.**



அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் இன்றைய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் நகல் வடிவை நிராகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நல்லிணக்கம் உட்பட மனித உரிமைகள் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பது குறித்து அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “இலங்கையில் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார். நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் புதிய அரசு தெரிவு செய்யப்படும்.

02



# தம்பலகாமத்தில் ஏர்பூட்டு விழா!

(ஹஸ்பர் )

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலர் பகுதியில் உள்ள கல்மெடியாவ வடக்கு கிராம சேவகர் புளியூத்து குள விவசாய பகுதியில் ஏர்பூட்டு விழா இடம்பெற்றது.

இன்று (08) இடம்பெற்ற இந்த நிகழ்வைப் பகுதி விவசாய சம்மேளனம் ஏற்பாடு செய்தது. நிகழ்வில் பிரதம அதிதியாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி கலந்து கொண்டார்.

பெரும்போக நெற்செய்கைக்கான வயல் விதைப்பு இடம் பெறவுள்ள நிலையில் இயந்திரம் மூலமான ஏர்பூட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இதில் தம்பலகாமம் பிரதேச கமநல சேவை திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய சம்மேளன உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## ஐ.நா. தீர்மானத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் எங்கள் நிலைப்பாட்டை ஜெனிவாவுக்குத் தெரியப்படுத்துவோம்.

இந்தத் தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும். எனினும், இதற்குக் காலம் தேவை. நாளை புதன்கிழமை ஜெனிவாவில் இந்த நிலைப்பாட்டைத் தெரியப்படுத்துவோம்." – என்றார்.

## திருகோண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த 45 வயதான அமரசிங்க ஆராச்சிலாகே சுமித் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அநுரவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை நினைவு கூர்ந்துள்ள ஜோ பைடன், முழு அமெரிக்க மக்களின் சார்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதோடு, இலங்கையின் ஜனநாயகத்தை மேலும் பலப்படுத்துவதன் மூலம் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியை அமைதியான முறையில் முன்னெடுத்தமைக்கும் தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

"இந்த தேர்தல் இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் பலத்தையும்,ஜனநாயகத்தின் அடிப்படைகளான அமைதியான, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலின் மூலம் தமது எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்வதற்கான இலங்கை மக்களின் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகின்றது." – என்றும் ஜோ பைடன் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் ஸ்திரத்தன்மை, சுபீட்சம் மற்றும் முன்னேற்றத்தை அடைவதற்கு அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையில் ஒத்துழைப்பை வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க – இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிப்பதாகவும், பிராந்தியத்திற்கு நன்மை பயக்கும் மற்றும் ஜனநாயகக் கொள்கைகளைப் பாதுகாக்கும் முன்னெடுப்புகள் தொடர்பில் இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்படத் தயாராக இருப்பதை இந்த வாழ்த்துச் செய்தி எடுத்துக்காட்டுகின்றது என்று இலங்கை ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



# இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான உதவி வழங்க அமெரிக்கா தயார்

## தூதுவர் ஜூலி சங் உறுதியளிப்பு



இலங்கையின் பொருளதாரத்தைப் பலப்படுத்தத் தேவையான எந்தவொரு ஒத்துழைப்பையும் வழங்கத் தயார் என்று அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தக பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்கத் தயார் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியையும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய அமெரிக்க அபிவிருத்தி முகவர் நிலையத்தின் ஊடாக நிதி உதவிகளை வழங்கத் தயார் என்றும் தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

ஊழல், மோசடிகளை மட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்துக்கு அமெரிக்க தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

சிறந்த அரச நிர்வாகத்துக்காக வழங்கக்கூடிய எந்தவொரு உதவியையும் வழங்குவதோடு, பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்தில் அதற்கான உதவிகளை வழங்கவும் அவர் இணக்கம் தெரிவித்தார்.

மீள் புதுபிக்கத்தக்க வலுசக்தி, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்குதல் மற்றும் கிராமங்களின் வறுமையை ஒழிப்பதற்காகப் புதிய ஜனாதிபதியால் முன்னெடுத்துச் செல்லப்படும் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமெரிக்கத் தூதுவர் உறுதியளித்தார்.

தற்போது செயற்படுத்தப்படும் கிராமிய பாடசாலைகளின் பகல் உணவு வேலைத்திட்டத்தை நகர பாடசாலைகளிலும் வழங்க உதவிகளை வழங்கவிருப்பதாகவும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜஸ்டின் டிவென்ஷோ மற்றும் பொருளாதார நிபுணர் கிறிஸ்டோபர் குஷ் உள்ளிட்டோரும் கலந்துகொண்டிருந்தனர்.







# யாழ். தெரிவத்தாட்சி அலுவலருடன் தேர்தல்கள் ஆணையாளர் சந்திப்பு

தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதீபனை இன்று செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் தற்போதைய வேட்புமனு கையேற்றல் தொடர்பாகவும், எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பற்றியும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தேர்தல்கள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் எஸ். அச்சுதனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.



# கட்டுமரம் கவிழ்ந்ததில் கடற்தொழிலாளி சாவு

## வடமராட்சியில் சோகம்

யாழ். வடமராட்சி கடலில் கட்டுமரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் கடற்றொழிலாளி ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

தும்பளை லூதர் மாத கோயிலடியைச் சேர்ந்த திருச்செல்வம் ஞானப்பிரகாசம் (வயது 69) என்பவரே உயிரிழந்தார்.

தனது கட்டுமரத்தில் கடற்றொழிலுக்காகக் கடலுக்குள் சென்ற வேளை கட்டுமரம் கடலில் கவிழ்ந்ததில் அவர் கடலில் மூழ்கிச் சாவடைந்தார்.

சடலம் சக தொழிலாளிகளால் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.





# இரு நூல்களின் வெளியீட்டு விழா!

கவிஞர் புத்தளம் மரிக்கார் எழுதியுள்ள இரு நூல்களின் வெளியீட்டு விழா புத்தளம் நகரில் சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரி ஷாமில் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு சிரேஷ்ட ஊடகவியலாளர் அஷ்ரப் சிஹாப்தீன் தலைமை வகித்தார்.

புத்தளம் கிறியேற் இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் "ரகசியங்கள்", "மைத்துளிகள் மரணிப்பதில்லை" ஆகிய இரு நூல்களே வெளியிட்டு வைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.அலா அஹமத் கலந்து கொண்டார்.

விசேட அதிதிகளாக வலம்புரி கவிதா வட்டம் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹுசைன், புத்தளம் ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர், வரலாற்று ஆய்வாளர் இஸட்.ஏ.சன்ஹீர், கவியரங்க நெறியாளர், தமிழ்த் தென்றல் கவிஞர் எஸ்.எம்.அலி அக்பர், கவிஞர் சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ், வலம்புரி கவிதா வட்டம் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாகக் கவிஞர், பன்னூலாசிரியர் கலாபூஷணம் ஜவாத் மரிக்கார், கவிஞர், நாடகக் கலைஞர் அப்துல் லதீப், இலங்கை நெய்னார் சமூகநலக் காப்பகம் தலைவர் நெய்னார் இம்ரான், எழுத்தாளர், பன்னூலாசிரியர் ஸாக்கிரா இஸ்ஸதீன், அரச தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரி கலாபூஷணம் நூருல் அயன், சங்கக் கவி கிண்ணியா அமீர் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வரவேற்புரையினை புத்தளம் எக்ஸலன்ஸ் பாடசாலை அதிபர் எச்.அஜ்மல் நிகழ்த்தியதோடு தலைமையுரையை அஷ்ரப் சிஹாப்தீன் நிகழ்த்தினார்.

"மைத்துளிகள் மரணிப்பதில்லை" என்ற நூலின் நயவுரையை ஓய்வு நிலை உதவிக்கல்விப்பாளர் இஸட்.ஏ.சன்ஹீரும், கவி வாழ்த்துக்களை கவிஞர் ரஷீத் எம்.இம்தியாசும் நிகழ்த்தினர்.

"ரகசியங்கள்" எனும் நூலின் நயவுரையை கவிஞர் எஸ்.எம்.அலி அக்பர் நிகழ்த்தினார். இதன் கவி வாழ்த்தை இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்த்தினார்.

முதல் பிரதியை புத்தளத்தின் சமூகவியலாளர் தொழிலதிபர் சங்கர் நூலாசிரியரிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தேவை: முறைமை மாற்றம்

இது பொதுத் தேர்தல் காலம். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டை வழிநடத்தும் நாடாளுமன்றத்தை மக்கள் தெரிவு செய்ய வேண்டிய வேளை. தங்களின் தலையெழுத்தை மக்கள் தீர்மானிக்கும் காலம்.

கட்சிகள் ரீதியாக - கொள்கைகள் ரீதியாக - கோட்பாடுகள் ரீதியாக - மக்கள் தத்தமக்கு என தனித்துவ நிலைப்பாடுகளை கொண்டிருந்தாலும் கூட, இப்போதைய தேர்தலிலே ஒரு முக்கியமான விடயத்தை பொது அம்சமாக அவர்கள் மனங்கொண்டிருப்பது வெளிப்படையாகப் புலனாகின்றது.

அவர்களின் இந்த நிலைப்பாடு திடீரென வெளிப்படுவது அல்ல. 2021 ஆம் ஆண்டின் பின்னரான அறகலய போராட்டத்தோடு அவர்களது கருத்து நிலை வெளிப்பட்டு வருகின்றது. 2022 இல் அறகலய போராட்டத்தின் உச்சத்தில் அது தெளிவாக அம்பலமாகியது.

மக்களின் அந்த நிலைப்பாடு ஒன்றுதான். அது - மாற்றம். ஆட்சியாளர்கள், ஆட்சி முறைமைகள், நிர்வாகக் கட்டமைப்புகள் எல்லாவற்றிலுமே மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்து நிற்கின்றார்கள்.

2022 இல் அறகலய போராட்டம் ஒரு கட்டத்தில் முடக்கப்பட்டதோடு இந்த மாற்றத்திற்கான நகர்வுகள் தொடராமல் தடைப்பட்டு போயின. அல்லது தடுக்கப்பட்டு விட்டன.

ஆயினும் முறைமை மாற்றம் என்ற தங்கள் உறுதியான நிலைப்பாட்டில் இருந்து மக்கள் விலகி விடவில்லை என்பது வாக்குகள் மூலம் அவற்றை வெளிப்படுத்துவதற்கு அடுத்து கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே அவர்கள் தவறாமல் காட்டினர். அதனையே கடந்த மாதம் ஜனாதிபதி தேர்தலிலே நாம் நேரடியாகக் கண்டோம்.

ஆட்சி அதிகாரத்தை மாறி மாறி வைத்திருந்த பாரம்பரிய கட்சிகள் இந்தத் தேர்தலில் தூக்கி எறியப்பட்டதன் சாராம்சம் - சூத்திரம் - அதுதான்.

இப்போது கருகட்டியிருக்கும் பொது தேர்தலிலும் மக்களின் நிலைப்பாடு அதுவேதான் என்பது தெளிவானது.

இந்தப் பொதுத் தேர்தலில் மிக முக்கியமான கட்டமான வேட்பு மனுத் தாக்கல் இப்போது நடந்து கொண்டிருக்கின்றது. மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்திற்கான அடிப்படை இந்த வேட்பு மனு தாக்கலில் இருந்துதான் உருவாக வேண்டும். ஆனால் அதனை செய்ய வேண்டிய கட்சிகளும் குழுக்களும் மக்களின் அந்த மாற்றம் பற்றிய எதிர்பார்ப்பை - அவாவை - கருத்தில் கொண்டுள்ளனவா என்று கேள்வி - சந்தேகம் - அந்த வேட்பாளர் நியமனம் தொடர்பில் அத்தரப்புகள் எடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் ஏற்பாடுகளை அவதானிக்கும் போது எழுகின்றது.

மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் மாற்றத்திற்கான அடிப்படையை இந்த வேட்பு மனு தாக்கல் என்ற முக்கிய விவகாரத்தில் கட்சிகளும் தரப்புக்களும் கவனத்தில் கொள்ளவில்லையோ என்று சந்தேகம் எழுகின்றது.

வேட்பாளர் தேர்வு தொடர்பில் தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு அமைப்பான ‘பவ்ரல்’ குறிப்பிடும் கருத்தையும் இச்சமயத்தில் கட்சிகள், குழுக்கள் கவனிப்பது முக்கியமாகும்.

நீதிமன்றம் குற்றவாளிகள் என தீர்ப்பளித்தவர்களை வேட்பாளர்களாக நியமிக்கவேண்டாம் என அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீதிமன்றத்தினால் ஊழல் மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் எனத் தண்டனை விதிக்கப்பட்டவர்களை அரசியல் கட்சிகள் வேட்பாளர்களாக நியமிக்கக் கூடாது என அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்வோரை வேட்பாளர் பட்டியலில் சேர்த்தால் குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் பொதுமக்களிற்கு பதில் சொல்லவேண்டியிருக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

அரசியல் கட்சிகளைச் சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும், அதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம் இதுதான் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், தேசிய பட்டியல் வேட்பாளர்களாக நியமிப்பதற்கு தகுதியானவர்களை அரசியல் கட்சிகள் தெரிவு செய்யவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் அங்கிருந்துதான் ஆரம்பிக்கப்பட முடியும்.




# அன்னமலை வித்தியில் ஆசிரியர் தின விழா



சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தின் ஆசிரியர் தினவிழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும் பாடசாலை அதிபர் பொன். பாரதிதாசன் தலைமையில் நேற்று (7) திங்கட்கிழமை நடைபெற்றன.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வித்தகர் வி.ரி.சகாதேவராஜா கலந்து கொண்டார்.

சர்வதேச ஆசிரியர் தின விழாவில் சம்மாந்துறை வலயத்தில் 26 ஆண்டுகள் உதவிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற வி.ரி.சகாதேவராஜாவுக்கான சேவை நலன் பாராட்டு விழாவும் இடம்பெற்றது.

முன்னதாக மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து பிரதம அதிதி மற்றும் அதிபர், ஆசிரியர்களை மாலை சூட்டி வரவேற்றனர்

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திருமதி காஞ்சனா சிவகாந்தன் தலைமையிலான பெற்றோர்கள் குழு இந்த நிகழ்வை முன்னெடுத்தது.

# விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் ஸாஹிரா கல்லூரி மாணவன் சாதனை!




**(நூருல் ஹுதா உமர்)**

கிழக்கு மாகாண, மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி - 2024 இல், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை தரம் 9 ஐச் சேர்ந்த இரு மொழிக் கல்விப் பிரிவின் மாணவன் எம்.பி.சாஃபி, திறமை சித்தியைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

சாஃபியின் சிறப்பான சாதனையானது அவரது கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் அறிவியலுக்கான ஆர்வம் ஆகியவற்றைக் காட்டுகிறது.

இந்த அபாரமான சாதனைக்காக அவரை பாடசாலை சமூகத்தினர் வாழ்த்தியுள்ளனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# பாலஸ்தீன மக்களுக்காக கொழும்பில் போராட்டம்



(எம். எப். நிபாஸ்)

காசாவில் உள்ள பாலஸ்தீன மக்களுக்கு எதிராக 2023 ஒக்டோபர் 7இல் இஸ்ரேல் ஆரம்பித்த இனப்படுகொலையை உடனடியாக நிறுத்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலையீடு கோரி முஸ்லிம் முற்போக்கு சக்தி நேற்று (7) கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்துக்கு முன்பாக சுதந்திர பாலஸ்தீனத்துக்காக நண்பர்களுடன் இணைந்து போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

அதில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் ஸ்தாபகரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான கலீலுர் ரஹ்மான் கலந்து கொண்டார்.

அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கலீலுர் ரஹ்மான்,

பாலஸ்தீன நெருக்கடி தொடர்பில் தற்போதைய ஜனாதிபதி உள்ளிட்ட அரசு எவ்வித அறிக்கையும் வெளியிடாதது வருத்தமளிக்கிறது. அதேவேளை, பாலஸ்தீன நெருக்கடி தொடர்பில் அவர்களின் கடந்த கால நிலைப்பாட்டையும் பாராட்டுகிறோம்.

எனவே, கடந்த அரசு இலங்கைத் தொழிலாளர்களை அவர்களின் உயிரையும் பொருட்படுத்தாமல் டொலர்களுக்காக இஸ்ரேலுக்கு வேலைக்காக அனுப்பிய அவலம்.

அத்துடன், பலஸ்தீனப் போராளிகளால் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால், இந்நாட்டு முஸ்லிம்களுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலைமைக்கு அவர்களை இழுத்துச் செல்வது புவிசார் அரசியல் சதியாக இருக்கலாம் என சந்தேகிக்கிறோம்.

இந்தத் துரதிர்ஷ்டமான நிலையைத் தவிர்க்கத் தற்போதைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுப்பது புத்திசாலித்தனமானது என்பதை நாம் வலியுறுத்தினோம்.- என்றார்.



# பனங்காடு வைத்தியசாலையின் அபிவிருத்திக் கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பனங்காடு பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரை சந்தித்து அவ் வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடினார்.

வைத்தியசாலையின் தேவைகள் மற்றும் குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்ட பிராந்தியப் பணிப்பாளர் சுகாதார மேம்பாடு மற்றும் வைத்திய சாலையின் அபிவிருத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதாகவும் இதன்போது குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலின் போது பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிரும் கலந்துகொண்டார்.

# கர்நாடக இசைக்கச்சேரி!



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்திய இரண்டாவது கர்நாடக இசைக் கச்சேரி காரைதீவு விபுலானந்த மணி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தியாவில் இசைத் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்ற அழகரெத்தினம் கல்யாண்சரண் (வாய்ப்பாட்டு), சுதாகரன் கோவிசரண் (மிருதங்கம்) ,பிரிசில்லா ஜோர்ஜ் (வயலின்) ஆகியோர் இந்த கர்நாடக இசைக் கச்சேரியை ஒரு மணி நேரம் சிறப்பாக நடத்தினர்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றத்தின் போஷகர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா கலந்து கொண்டார். நிகழ்வில் விபுலானந்த பணி மன்ற செயலாளர் கு.ஜெயராஜி நன்றியுரையாற்றினார்.

# அட்டாளைச்சேனை முதியோருக்கு சுயதொழிலுக்கான வேலைத் திட்டம்





(எம். எப். நவாஸ் )

சமூக சேவை அமைச்சின் கீழுள்ள முதியோர்களுக்குத் தேசிய செயலகத்தின் ஊடாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு சுயதொழில் முயற்சிக்காக ஆடுகளும், வியாபார பொருள்களும் மற்றும் ஐம்பதாயிரம் பெறுமதியான காசோலைகளும் பிரதேச செயலாளர் பி.ரி.எம். இர்பானால் பிரதேச செயலகத்தில்வைத்து (07) வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சமூக சேவை மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.ஏ.எம். கைஸ், சமூக சேவைப் பிரிவு பிரதம முகாமைத்துவசேவை உத்தியோகத்தர் கே.எம். அன்ஸார், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளும் கலந்து கொண்டனர்.







# மக்களின் நலன்களை முன்வைக்கும் திறமையான தலைவர்களே வேண்டும்

## கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மாஹிர் தெரிவிப்பு

(மாளிகைக்காடு)

இளைஞர்களும் பொது மக்களும் ஊழலற்ற, மக்களின் நலன்களை முன்வைக்கும் திறமையான தலைவர்களை விரும்புகின்றனர். இதேபோல், சம்மாந்துறை மக்களும் புதிய மாற்றங்களை விரும்பி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியையும் அதன் வேட்பாளர்களையும் ஆதரிக்க தயாராக உள்ளனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சர்வதேச விடயங்களுக்கான பணிப்பாளரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.எல். எம். மாஹிர் தெரிவித்தார்.

அவரது தலைமையில் சம்மாந்துறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு பேசிய அவர்,

உருவாகப்போகும் நாடாளுமன்றத்தில் எங்கள் மாவட்ட மக்களின் சார்பாகக் குரல்கள் நிச்சயம் ஒலிக்க வேண்டும். இந்தத் தேர்தலில், சம்மாந்துறை மக்களும், மாவட்ட மக்களும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுடன் இணைந்து வலுச் சேர்ப்பார்கள்.-என்றார்.

சம்மாந்துறைத் தொகுதி இழந்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஊடாக பெறுவதற்கான விரிவான வியூகம் மற்றும் மாற்றத்தை நோக்கி நகர்வதற்கான முக்கிய கருத்துக்கள் மக்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உயர்நிலை உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட நிர்வாகிகள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர்கள், புத்திஜீவிகள் மற்றும் பல ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

# ஏழை மக்களின் வாக்குகளைச் சூறையாடும் கலாசாரத்தை ஒழிப்பதற்கு முன்வாருங்கள்!

## கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைர் உலமா சபைக்குக் கடிதம்

நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் ஜனநாயக ரீதியாக தாங்கள் விரும்பிய கட்சிக்கும் வேட்பாளருக்கும் வாக்குகளைச் செலுத்துவதற்கான நல்லதொரு சூழலை ஏற்படுத்துமாறு கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். சுபைர் ஜம்இய்யத்துல் உலமா சபை ஏறாவூர் கிளைக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிமிக்க சூழ் நிலையில் ஜனாதிபதி தேர்தலை சந்தித்துச் சில வாரங்களின் பின்னர் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்க வேண்டியதொரு இக்கட்டான காலகட்டத்தில் உள்ளோம். செப்டம்பர் 21 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலானது, ஜனநாயக ரீதியாகவும், வன்முறைச் சம்பவங்கள் இன்றி நீதியாகவும் நேர்மையாகவும் இடம்பெற்றதைத் தாங்கள் நன்கறிவீர்கள்.

ஏதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பலரும் போட்டியிடவுள்ள நிலையில், நானும்



போட்டியிடுவதற்காக தீர்மானித்துள்ளேன். குறித்த பொதுத் தேர்தலானது நீதியாகவும் நேர்மையாகவும் இடம்பெற வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

குறிப்பாகப் பொதுத் தேர்தல் இடம்பெறுகின்ற போது அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தங்களுக்கு உரிய வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக பணங்களையும், அன்பளிப்பு பொருள்களையும் வழங்கும் ஒரு மோசமான கலாச்சாரம் எமது பிரதேசத்தில் தொடர்ச்சியாக இருந்து வருகிறது. இந்தப் பிரதேசத்தில் வாழும் ஏழை மக்களின் வாக்குகளை இலக்கு வைத்தே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இது அப்பட்டமான தேர்தல் லஞ்சமும் மோசடியுமாகும்.

இவ்வாறு சிறு தொகைப் பணங்களையும், சில்லறைப் பொருள்களையும் கப்பமாகக் கொடுத்து இந்தப் பிரதேச மக்களின் விலை மதிக்க முடியாத வாக்குரிமையைச் சூறையாடுகின்ற அரசியல்வாதிகளிடம் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் எமக்குள்ளது. இந்தக் கீழ்த்தரமான செயற்பாடுகள் இந்தப் பிரதேசத்திலிருந்து துடைத்தெறியப்பட வேண்டும்.

மக்களைப் பிழையாக வழிநடாத்தி பதவிகளை அடைந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற இந்தக் கீழ்த்தரமான நிகழ்வுகளை ஒருபோதும் அங்கிகரிக்க முடியாது.

குறிப்பாக, ஏதிர்வரும் தேர்தலில் இங்குள்ள மக்கள் ஜனநாயக ரீதியாக தங்களது வாக்குரிமையைத் தாங்கள் விரும்பிய கட்சிக்கும் வேட்பாளருக்கும் செலுத்துவதற்கான நல்லதொரு சூழலை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். – என்றுள்ளது.



## காசா போர் ஓராண்டின் பின்:

# வரலாறு காணாத பாலஸ்தீன ஆதரவு! சர்வதேச எதிப்பை நோக்கும் இஸ்ரேல்!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா.**

*(தங்கள் பெயரால் இந்த கொடூர யுத்தம் வேண்டாம் என புலம்பெயர்ந்து வாழும் யூதர்களில் உள்ள ஜனநாயக உணர்வு கொண்டோர் பாலஸ்தீன ஆதரவு போராட்டங்களில் ஈடுபட்டும் உள்ளனர்.)*

கடந்த ஓராண்டாகக் காசா போரை எதிர்த்து, அரபுலகம் ஆர்ப்பரித்து எழுந்து நிற்பது ஒருபுறம் என்றால் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் பிற மேற்குலக நாடுகளிலும் போர் நிறுத்தம் கோரி பாலஸ்தீன ஆதரவுப் போராட்டங்கள் அந்தந்த நாடுகளின் தலைநகரில் நடந்துள்ளன.

அதேவேளை தங்கள் பெயரால் இந்த கொடூர யுத்தம் வேண்டாம் என புலம்பெயர்ந்து வாழும் யூதர்களில் உள்ள ஜனநாயக உணர்வு கொண்டோர் போராட்டங்களில் ஈடுபட்டும் உள்ளனர்.

ஐரோப்பாவில் பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மைக்ரன், பயங்கரவாத எதிர்ப்புப் போர் என முதலில் இஸ்ரேல் ஆதரவு நிலை எடுத்திருந்த போதும் பின்னர் உள்நாட்டுப் போராட்டங்களின் அழுத்தம் காரணமாக போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

லண்டனில் நடந்த பாலஸ்தீன ஆதரவுப் போராட்டத்துக்கு எதிராகப் பேசிய இங்கிலாந்தின் முன்னாள் உள்துறை செயலர் சுவல்லா பிரேவர்மேன் பதவியில் இருந்து நீக்கப்படும் நிலையும் ஏற்பட்டது.

### அமெரிக்காவில் போர்நிறுத்தம் கோரி போராட்டம்

அமெரிக்காவிலும் போர்நிறுத்தம் கோரி தலை நகரங்களில் போராட்டங்கள் பல நடந்தன. இளந் தலைமுறையினர் போராட்டங்களுக்கு வந்ததும் ஒரு புதிய காட்சி என்று சொல்லப்படுகிறது. அமெரிக்கா இஸ்ரேலுக்கு படை உதவி செய்யக்கூடாதென்று அவர்கள் குரல் எழுப்பினர்.

அமெரிக்க ஜனாதிபதி பைடன் உள்ளிட்ட அமெரிக்க அரசத் தலைவர்கள் இஸ்ரேல் நடத்திவரும் இன வழிப்புக்கு துணைபோகிறார்கள் எனக் குற்றஞ்சாட்டியும் இஸ்ரேலுக்கு பண உதவி, ஆயுத உதவி, அரச உதவிகள் செய்யக் கூடாது என்று கலிஃபோர்னியா நீதிமன்றத்தில் அரசமைப்புச் சட்ட உரிமைகளுக்கான மையம் ( Centre for Constitutional Rights) என்ற மனிதவுரிமை அமைப்பு வழக்கு தொடுத்தும் இருந்தது.

தென்னாப்பிரிகா இஸ்ரேலுடனான தனது தூதரக உறவைத் துண்டித்துக் கொண்டது. இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பொலிவியா, கொலம்பியா, சிலி, ஹொண்டுராஷ் ஆகிய இடதுசாரிக் கட்சிகள் ஆளும் நாடுகள் இஸ்ரேலுடனான அரசியல் உறவைத் முழுமையாக துண்டித்துக் கொண்டன.

கடந்த வருட 2023 நவம்பரில் சவுதியில் அரபுக் கழக 22 அரபு நாடுகளும், இஸ்லாமிய ஒத்து ழைப்புக் கான அமைப்பின் OIC – 57 இஸ்லாமியர் பெரும்ப ான்மை கொண்ட நாடுகளும் கூடி போர்நிறுத்தத்தை வலியுறுத்தியும் இஸ்ரேல் நடத்திவரும் படு கொலைகளைக் கண்டித்தும் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தியும் போர்க்குற்றங்களைக் கண்டித்தும் ஐ.நா. பாதுகாப்பு அவை கட்டாயப் படுத்தும் தீர்மானம் கொண்டுவர வலியுறுத்தின.

இஸ்ரேலுடனான உறவைத் துண்டிக் கொள்வது பற்றி வலியுறுத்தியதில் சவுதி வெற்றிக் கண்டது என்பதும் இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது.

பிரிக்ஸ் – BRICS கூட்டமைப்பின் பிரேசில், இரசியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா தலைவர்கள் சந்தித்து காசாவில் நடந்துவரும் போர்க் குற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும், போர் நிறுத்தம் வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இந்த நாடுகள் மட்டுமின்றி எகிப்து, எத்தியோபியா, அர்ஜெண்டினா, சவுதி, ஐக்கிய அரபு அமீரகம், ஈரான் ஆகிய நாடுகளின் தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர். ஐ.நா. செயலர் அண்டோனிய குட்டரசும் இதில் கலந்து கொண்டார்.

ஆனால் இந்தியாவில் மட்டும்தான் பாலஸ்தீன ஆதரவுப் போராட்டங்கள் சொல்லிக் கொள்ளும்படி இல்லை.

### போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் ஐ.நா. தீர்மானம்

கடந்த வருட நவம்பர் 15 இல் ஐ.நா. பாதுகாப்பு அவையில், உடனடி மற்றும் நீடித்த மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

15 உறுப்பினர்கள் கொண்ட பாதுகாப்பு அவையில் குறைந்தது 9 நாடுகள் வாக்களித்தால்தான் ஒரு

தொடர்ச்சி▼




# வரலாறு காணாத பாலஸ்தீன ஆதரவு! சர்வதேச எதிர்ப்பை நோக்கும் இஸ்ரேல்!

**தொடர்ச்சி▲**

தீர்மானம் நிறைவேறும். மால்டா என்ற நாடுதான் இத்தீர்மானத்தை முன்மொழிந்தது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஆகிய நாடுகள் இத்தீர்மானத்தில் வாக்களிக்காமல் விலகிக் கொண்டன.

ஏனைய 12 நாடுகளின் ஆதரவுடன் இத்தீர்மானம் நிறைவேறியது. இத்தீர்மானத்தில் ஹமாஸ் நடத்திய அக்டோபர் 7 தாக்குதல் பற்றியும் இஸ்ரேல் நடத்தும் வான்வழிக் குண்டு வீச்சுகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது. ஹமாஸ் தாக்குதல் பற்றிய கண்டன குறிப்பு இல்லை என்பதற்காக அமெரிக்கா உறுப்பு நாடுகளைக் கடிந்து கொண்டது.

போர் தொடங்கியதில் இருந்து நான்கு தீர்மானங்கள் பாதுகாப்பு அவையில் முன்மொழியப்பட்டு அவை தோற்கடிக்கப்பட்டன.

பிரேசில் கொண்டு வந்த தீர்மான முன்மொழிவில், இஸ்ரேலுக்கு இருக்கும் தற்பாதுகாப்புக்கான உரிமை பற்றிய குறிப்பு இல்லை என்ற காரணத்தின் பெயரால் அமெரிக்கா தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அதை தோற்கடித்தது. போர் நிறுத்தம் கோராத அமெரிக்காவின் தீர்மான முன்மொழிவு ரசியாவாலும் சீனாவாலும் மூலம் தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை ரஷ்யாவின் இரு தீர்மான முன்மொழிவுகள் போதிய ஆதரவில்லாததால் தோற்றுப்போயின.

ஐ.நா. பாதுகாப்பு அவையில் தீர்மானம் நிறைவேற்ற முடியாத நிலையில், 2023 ஒக்ரோபர் 23 இல் ஐ. நா. பொதுப் பேரவையின் அவசரக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு போர் நிறுத்தம் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது கட்டாயப்படுத்தும் தீர்மானம் அல்ல. ( Non – binding resolution) பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்துக்கு நீண்ட காலமாக ஆதரவு தெரிவித்து வந்த இந்திய அரசோ அந்தத் தீர்மானத்தில் வாக்களிக்காமல் ஒதுங்கி நின்றது.

**இஸ்ரேல் பாதுகாப்பு தீர்மானங்களை மதித்ததில்லை**

2023 ஒக்ரோபர் 23 இல் ஐ.நா. பாதுகாப்பு அவைக் கூட்டத்தில் அதன் உறுப்பினர்களின் வெளியுறவு அமைச்சர்கள் பங்குபற்றியிருந்த போது, ஐ.நா. செயலர் அண்டோனியா குட்டர்சு, ஹமாசின் தாக்குதலைக் கண்டித்த அதேநேரத்தில், பாலஸ்தீனர்கள் கடந்த பல ஆண்டுகளாக மூச்சு திணறும் ஆக்கிரமிப்பையும் கண்டித்தார்.

ஆனால், பாலஸ்தீன மக்களின் துயரங்களின் பெயரால் ஹமாஸ் நடத்திய தாக்குதலை நியாயப்படுத்த முடியாது. ஹமாஸ் நடத்திய தாக்குதலின் பெயரால் பாலஸ்தீன மக்களுக்குக் கூட்டுத் தண்டனை வழங்குவதையும் ஏற்க முடியாது என்றும் பேசினார்.

ஹமாஸ் நடத்திய தாக்குதலை நியாயப்படுத்தி விட்டதாகவும் பயங்கரவாதத்துக்குத் துணைபோவதாகவும் சொல்லி ஐ.நாவை மிரட்டும் தொனியில் பேசியது இஸ்ரேல். ஐ.நா. செயலர் பதவி விலக வேண்டும், ஐ.நாவுக்குப் பாடம் புகட்டுவோம் என்றெல்லாம் பேசி இஸ்ரேல் தன்னை ஓர் கொடும் அரசாக (rogue state) வெளிப்படுத்திக் கொண்டது.

ஒருபோதும் ஐ.நா. பாதுகாப்பு அவைத் தீர்மானத்தைப் பொருட்படுத்தவில்லை இஸ்ரேல். கடந்த காலங்களிலும் ஐ.நா. பாதுகாப்பு அவைத் தீர்மானங்களை அது மதித்ததில்லை. அடுத்தக் கட்டமாக இஸ்ரேல் அரசுக்கு எதிராக பொருளியல் தடைகளை விதிப்பதை நோக்கி பாதுகாப்பு அவை செல்லாமல் இருப்பதை அமெரிக்கா பார்த்துக் கொள்ளும் என்ற துணிச்சல்தான் இதற்கு காரணம் ஆகும்.

**கத்தாரின் பேச்சு முயற்சி**

காசாவில் எந்த நேரத்திலும் தொற்றுநோய் பரவும் அபாயம் இருக்கிறது என்று ஐ.நா. எச்சரித்திருந்த நிலையில் கத்தாரின் பேச்சு முயற்சியில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டு நான்கு நாள்கள் போர் நிறுத்தத்திற்கான உடன்பாட்டை இஸ்ரேலும் ஹமாஸூம் எட்டின.

குழந்தைகள், பெண்கள் அடங்கிய பணயக் கைதிகள் 50 பேரை விடுவிப்பதாக ஹமாஸூம், 150 பேரை விடுவிப்பதாக இஸ்ரேலும் உடன்பாடு எட்டின.

**பாலஸ்தீன போராட்ட ஆதரவு பெருககிறது**

ஒக்ரோபர் 7 ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்குப் பின் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு பெருகியுள்ளது என்பது உண்மையே. தற்போது இஸ்ரேலின் பயங்கரவாத முகம் உலகுக்கு தெரியவந்துள்ளது. பயங்கரவாத எதிர்ப்பின் பெயரால் விடுதலைப் போராட்டங்களை நசுக்கலாம் என்ற நிலை கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான முகாம் – சீனா தலைமையிலான முகாம் என கொஞ்சம் கொஞ்சமாக உலகம் இருமுனையாகப் பிரிந்து காட்சியளிக்கத் தொடங்கியுள்ளது.

சாதகமான பன்னாட்டு சூழலை உருவாக்கி வருகிறது. போராடும் ஆற்றல்கள் கிடைக்கும் இந்த அரசியல் வெளியை ஆகச் சிறந்த வகையில் பயன்படுத்தி, குறைந்த இழப்புகளுடன் முன்னேறி, தம்மைத் தற்காத்துக் கொண்டு, விடுதலைப் போராட்டத்தை முன்னகர்த்த வேண்டும் என்பதே இக்கால யதார்த்தமாகும்.



# வெடுக்குநாறிமலை தமிழ் சமூகத்தின் அடையாளம்...!

இலங்கையின் வடக்கு – கிழக்கு பகுதிகள் அதிகமாக தமிழர் வாழும் பகுதிகளாக காணப்படுகின்றன. இன்று வரையிலுமே இங்கு வாழும் மக்கள் தமக்கான உரிமைகளுக்காகவும் அடையாளங்களுக்காகவும் ஏதோ ஒரு விதத்தில் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இலங்கையில் இடம்பெற்ற முப்பது வருட ஈழப் போராட்டத்தின் விளைவாக அநேகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். அதேபோல் காணாமல் ஆக்கப் பட்டார்கள்.

அதேநேரம் வடக்கு – கிழக்கு தமிழருக்கு சொந்தமானது என கூறக் கூடிய தனித்துவமான பல அடையாளச் சின்னங்களும் இல்லாது ஒழிக்கப்பட்டன. அந்த வரிசையில் மிக முக்கியமாக தமிழரின் அறிவுக் களஞ்சியமான யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டதை கூறலாம். அதேபோன்று இன்றுவரையிலுமே சட்ட விரோதமான சிங்கள மீள்குடியேற்றங்களாலும் காணி அபகரிப்பாலும் மக்கள் பாதிக்கப்பட்டு கொண்டிருக் கிறார்கள்.

ஈழப் போர் முடிந்து பல வருடங்களான போதிலும் நில உரிமைக்காக இன்று வரையிலுமே மக்கள் போராட வேண்டிய சூழ்நிலைதான் காணப்படுகின்றது. ஆகவே அந்த வரிசையில் வன்னி பெரு நிலப்பரப்பின் மிக முக்கியமான அடையாளமாகவும் தற்போது வரையிலும் மிக முக்கியமான பிரச்சினையாகவும் காணப்படுவது வெடிக்குநாறி மலை. வவுனியா வடக்கின் நெடுங்கேணி கிராமத்தில் இருந்து சுமார் ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் கிராமங்களில் ஒன்று ஒலுமடு. ஒலுமடு கிராமத்தில் இருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் வெடுக்குநாறி மலை அமைந்துள்ளது. 300 மீற்றர் உயரமாக காணப்படும் இக்குன்றின் உச்சியில் ஆதிலிங்கேஸ்வரர் எனப்படும் சிவனுக்கான புராதன கோயில் காணப்படுகின்றது. சிவ பக்தனான இராவணன் ஆண்ட பூமியினாலே ஈழம் சிவபூமி என்று சிறப்பித்து அழைக்கப்படுகின்றது.

ஈழத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களின் பூர்வீக குடிகளான நாகர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை அடையாளப்படுத்தும் முக்கிய தொல்பொருள் ஆதாரமாகவும் இந்தக் கோயில் காணப் படுகின்றது.

கி.மு 304 இல் வாழ்ந்த அசோகச் சக்கரவர்த்திகளால் பொறிக்கப்பட்ட பிராமி எழுத்துக்கள் ஆலயத்தின் முகப்பில் காணப்படுகின்றன. இதனை சான்றாதாரமாகக் கொண்டு இவ்வாலயம் 2000 வருடங்கள் பழமையானது என தொல்லியியலாளர்களால் கூறப்படுகின்றது. பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு நபர்களால் சிதைவுக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் அதன் தொன் மையானது. இன்றுவரையிலும் மாறாமல் காணப் படுகின்றது.

இங்குள்ள கிராம மக்கள் விநாயகர் அம்மன் வைரவர் ஆகிய தெய்வங்களுக்குச் சிலை வைத்து வழிப டுகின்றனர்.

இந்த மலையின் முதல் பகுதியை கடந்து மேலே செல்லும் போது அகழி போன்ற சிறிய நீர்த்தடாகம் ஒன்று காணப்படுகின்றது. இந்த நீர்த்தடாகத்தில் வெயில் காலங்களிலும் நீர் வற்றாமல் அப்படியே நிறைந்திருக்கும் என கிராம மக்கள் கூறுகின்றனர். நீர்த்தடாகத்துக்கு மேலே சற்று உயரமான பகுதியில் நாக வழிபாட்டை பிரதிபலிக்கும் கற்தெய்வ வழிபாடுகள் இடம் பெறுகின்றன. இங்கு திருவிழாக்கள் பருவநாள் பூசைய, அமாவாசை பூசை, வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் வாராந்த பூசை, நிவர்த்தி கடன், பரிகாரங்கள், சிவராத்திரி பூசைகள் போன்ற சிறப்பு வழிபாடுகளும் இங்கு இடம் பெறுகின்றன.

ஆரம்ப காலத்தில் ஆகம விதிகளுக்கு அமையாத வழிபாடு காணப்பட்ட போதிலும் இன்று ஆகம விதிமுறைகளுக்கு ஏற்ப வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. புராதன கால கதையின்படி வெடுக்குநாறி மலை என்பது ஹனுமன் பர்வத மலையை தூக்கிக் கொண்டு செல்லும் போது அதில் ஒரு துண்டு விழுந்து

தொடர்ச்சி ▼



# வெடுக்குநாறிமலை தமிழ் சமூகத்தின் அடையாளம்...!

**தொடர்ச்சி▲**

அது வெடுக்குநாறி மலையாக பெயர் பெற்றது என கூறப்படுகின்றது. இந்த கதையைப் போலவே இங்கு பல வகையான மூலிகைகள் காணப்படுகின்றன.

இத்தனை ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் வெடுக்குநாறி மலையானது இன்றுமே தமிழர்களுக் கானதா? அல்லது சிங்களவர்களுக்கானதா? என்று சர்ச்சை தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது.

சிங்கள தொல்லியலாளர்களான பரணவிதான போன்றோர் இவ்வாலயம் சிங்கள கல்வெட்டுகளையே கொண்டுள்ளது இது பௌத்த மதத்துக்கு உரித்தானது என கூறுகின்றனர். இவ்வாறான சர்ச்சைகள் தொடர்ந்து ஏற்பட்டதால் 2018 ஆம் ஆண்டிலிருந்து தொல்லியல் திணைக்களத்தினர் மற்றும் வனவள திணைக்களத்தினர் மீண்டும் மக்கள் இந்த ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகள் மேற்க்கொள்ளத் தடை விதித்தனர். இதனால் இலங்கை அரசுக்கு எதிராக மக்கள் தொடர்ந்து போராட்டங்கள் ஊர்வலங்கள் கண்டன அறிக்கைகள் என்பவற்றை மேற்கொண்டனர். பின்னர் ஆலய நிர்வாகத்தினர் தொடுத்த மேன்முறையீட்டு வழக்குகளின் மூலம் நீதிமன்ற தடைகள் அகற்றப்பட்டன.

எனினும் 2024 மார்ச் மாதம் 3 ஆம் திகதி வழிபாட்டைத் தடை செய்யுமாறு கோரி மீண்டும் பொலிஸாரால் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்ட போதிலும் நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்தது.

இருந்த போதிலும் 2024.03.09 மகா சிவராத்திரி தினத்தன்று வழிபாடுகளை மேற்கொள்ள சென்றவர்கள் மீது பொலிஸார் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதன் போது ஆலய நிர்வாகிகள் உட்பட எட்டு பேர் கைது செய்யப்பட்டனர். இந்த மிலேசத்தனமான தாக்குதல் காரணமாக வருகை தந்த அனைவருமே சிரமத்துக்கு உள்ளாகினர்.

இவ்வாறான செயல்கள் தமிழ் மக்களுக்கு எதிராக வலிந்து மேற்கொள்ளப்படும் இன அழிப்பாகவே கருதப்படுகின்றது.

இந்த நிலையில் மறுபுறம் குறித்த இடத்தின் பெயரும் கூகுளில் வட்டமான பர்வத விகாரை என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட வேண்டிய விடய மாகும். வெடுக்குநாறி மலை குறித்த சான்றாதாரங்கள் தொல்லியலாளர்கள் மூலமாக கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் இந்த இடத்துக்கான உரிமை இரண்டு பக்கங்களிலும் சர்ச்சைக்கு உரியதாகவே தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது உள்நாட்டில் சிங்கள தமிழ் மக்களிடையே இனமுரண்பாட்டை தோற்றுவிக்க கூடிய ஒரு காரணியாக அமையக்கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன.

இதற்கான சரியான தீர்வை தொல்லியலாளர்கள் ஆராய்ந்து வழங்குவதன் மூலமே இம்மலைக் குறித்து எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய இன ரீதியான முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்ள முடியும்.

காலம் காலமாக தமிழரின் அடையாள சின்னமாக பார்க்கப்பட்டுவரும் வெடுக்குநாறி மலை அரசியல் நோக்கங்களுக்காக இவ்வாறு சர்ச்சைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. ஆகவே இலங்கையில் செப்ரெம்பர் 21 ஜனாதிபதி தேர்தல் நிறைவடைந்து புதியதொரு ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ள இந்த வேளையில் வெடுக்குநாறிமலைப் பிரச்சினை எவ்வாறான கோணத்தில் கொண்டு செல்லபடும் என்பது அனைவருக்குமே பெரியதொரு எதிர்பார்ப்பாக உள்ளது.

**செல்வக்குமாரசாமி அபிசேகன்**
ஊடகக் கற்கைகள் துறை,
மூன்றம் வருடம்,
யாழ். பல்கலைகழகம்.



# ஜம்மு காஷ்மீர் தேர்தல் முடிவு: காங்கிரஸ் கூட்டணி முன்னிலை

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை காலை 8 மணிக்கு தொடங்கியது. பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது.

காலை 10 மணி தரவுகளின்படி காங்கிரஸ் கூட்டணி - 48, பா.ஜ.க - 29, பி.டி.பி - 4, பிற கட்சிகள் 9 இடங்களில் முன்னிலை வகிக்கின்றன.முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டு பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில்பதிவான வாக்குகள்எண்ணப்படுகிறது.

ஆரம்ப நிலையில் காங்கிரஸ் - தேசிய மாநாடு கட்சி கூட்டணி - பா.ஜ.க. இடையே கடும் போட்டி நிலவியது. படிப்படியாக வாக்கு எண்ணிக்கை நிலவரத்தில் சற்று மாற்றம் ஏற்பட்டது. 10 மணி தரவுகளின்படி காங்கிரஸ் கூட்டணி - 48, பா.ஜ.க - 29, பி.டி.பி. - 4, பிற கட்சிகள் 9 இடங்களில் முன்னிலை வகிக்கின்றன. தேசிய மாநாட்டுக் கட்சியின் முக்கியத் தலைவர் ஒமர் அப்துல்லா அவர் போட்டியிட்ட இரண்டு இடங்களிலும் முன்னிலை வகிக்கிறார்,

90 உறுப்பினர்கள் கொண்ட ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கு செப்டம்பர் 18, 25, ஒக்டோபர் 1 ஆகிய திகதிகளில் 3 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. இதில் மொத்தமாக 63.88 சதவீத வாக்குகள் பதிவாகின.

ஜம்மு காஷ்மீரில் 10 ஆண்டுகளுக்கு பிறகு தேர்தல் நடைபெற்றுள்ளது. மேலும் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு, ஜம்மு காஷ்மீர் 2 யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்ட பிறகு நடைபெற்ற முதல் தேர்தல் இது என்பதால் இத்தேர்தல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இங்கு தேசிய மாநாடு கட்சியும், காங்கிரஸும் கூட்டணி அமைத்து போட்டியிடும் நிலையில், பா.ஜ.கவும், மக்கள் ஜனநாயக கட்சியும் முக்கிய போட்டியாளர்களாக உள்ளன.

இத்தேர்தலில் காங்கிரஸ் - தேசிய மாநாடு கட்சி கூட்டணி பெரும்பான்மைக்கு சற்று குறைவாக 43 இடங்களிலும், பா.ஜ.க. 27, மக்கள் ஜனநாயக கட்சி 7, மற்றவர்கள் 13 இடங்களிலும் வெற்றி பெறுவார்கள் என்று தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

# ஹரியானாவில் வாக்கு எண்ணிக்கை நிலவரம்: பா.ஜ.க. முன்னிலை காங்கிரஸுக்கு அதிர்ச்சி

ஹரியானா சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று காலை 8 மணிக்கு தொடங்கியது. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டு, பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன.

ஆரம்பத்தில் முன்னிலை வகித்துவந்த காங்கிரஸ்/க்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது அக்கட்சிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஹரியானா முன்னாள் முதல்வர் பூபீந்திரா ஹூடா பின்னடைவை சந்தித்துள்ளார். அதேபோல் காங்கிரஸ் வேட்பாளர் வினேஷ் போகத்தும் பின்னடைவை சந்தித்துள்ளார்.

வாக்கு எண்ணிக்கையில் ஆரம்பக்கட்டத்தில் காங்கிரஸ் முன்னிலை வகித்தது. வெற்றிக்கு 46 தொகுதிகளைக் கைப்பற்ற வேண்டிய நிலையில் காலை 10 மணிக்குப் பின்னர் தேர்தல் முடிவுகளின் போக்கு மாறியது. காங்கிரஸ் 36 தொகுதிகளிலும், பா.ஜ.க. 47 தொகுதிகளிலும், 7 இடங்களில் பிற கட்சிகளும் முன்னிலை வகிக்கின்றன. 46 ஐ கடந்து முன்னிலை பெறும் கட்சிக்கே வெற்றி வாய்ப்பு பிரகாசமாக அமையும். இதனால் தற்போது பா.ஜ.கவினர் உற்சாகமடைந்துள்ளனர்.

ஹரியானாவில் காங்கிரஸ் ஆட்சியை கைப்பற்றும் என தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் தெரிவித்த நிலையில் காங்கிரஸ் ஆரம்ப கட்டத்தில் முன்னிலை வகித்தாலும் தற்போது பா.ஜ.கவுக்கு சாதகமாக முடிவுகள் செல்வது ஆம் ஆத்மி, ஜே.ஜே.பி. போன்ற கட்சிகள் காங்கிரஸுக்கான வாக்குகளைப் பிரித்ததால் ஏற்பட்டிருக்கலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

முன்னதாக வாக்கு எண்ணிக்கை தொடங்கும் முன்னர் மாநில முதல்வர் நாயாப் சிங் சைனி, ஹனுமன், பிரம்ம



சரோவர் உள்ளிட்ட கோயில்களுக்குச் சென்றுவந்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், “கடந்த 10 ஆண்டுகளாக மாநிலத்துக்காக பா.ஜ.க. நிறைய செய்துள்ளது. ஹரியானாவின் அனைத்து தரப்பு மக்களுக்காகவும் பா.ஜ.க. நேர்மையாக சேவை செய்துள்ளது. எங்கள் ஆட்சி ஹரியானாவின் வளர்ச்சிக்காக மீண்டும் உழைக்கும். இங்கே 3 ஆவது முறையாக நாங்கள் ஆட்சி அமைப்பது உறுதி.” என்று நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

மொத்தம் 90 உறுப்பினர்கள் கொண்ட ஹரியானா சட்டப்பேரவைக்கு கடந்த 5 ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. 67.90 சதவீத வாக்குகள் பதிவாகின. இந்த மாநிலத்தில் பா.ஜ.க - காங்கிரஸ் இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

இந்த 2 கட்சிகள் தவிர இந்திய தேசிய லோக் தளம் - பகுஜன் சமாஜ் கூட்டணியும், ஜனநாயக ஜனதா கட்சி - ஆசாத் சமாஜ் கட்சி கூட்டணியும் களத்தில் உள்ளன. காங்கிரஸுடன் கூட்டணி பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால், ஆம் ஆத்மி கட்சி தனித்து களமிறங்கியது. 90 தொகுதிகளை கொண்ட ஹரியானாவில் ஆட்சியை பிடிக்க 46 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.



# அணு ஆயுதங்களை பயன்படுத்துவோம் அமெரிக்காவுக்கு வட கொரியா மிரட்டல்

கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றத்தை ஏற்படுத்தும் அமெரிக்கா மற்றும் தென் கொரியாவுக்கு எதிராக அணு ஆயுதங்களை பயன்படுத்துவோம் என்று வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் மீண்டும் மிரட்டல் விடுத்துள்ளார்.

வடகொரிய தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய கிம் ஜாங் உன்,

"கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றத்தை ஏற்படுத்தினால் எந்தவித தயக்கங்களும் இன்றி எங்கள் எதிரிகளின் மீது எல்லா விதமான தாக்குதல்களையும் பயன்படுத்துவோம். அதில் அணு ஆயுதங்களுக்கும் விதிவிலக்கு இல்லை. தென் கொரியாவும், அமெரிக்காவும் கூட்டு அணுசக்தி அடிப்படையில் தங்கள் ராணுவக் கூட்டணியை வலுப்படுத்த முயல்வதால் வட கொரியாவின் அணுசக்தி முழுமையாக மேம்படுத்தப்பட வேண்டும். இது கொரிய தீபகற்பத்தின் மீதான அதிகார சமநிலையை உடைக்கும் ஆபத்தை அதிகரிக்கும்." - என்று தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே பலமுறை அமெரிக்கா மற்றும் வடகொரியாவுக்கு எதிராக கிம் மிரட்டல்கள் விடுத்திருந்தாலும், அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் இந்த புதிய மிரட்டல் கவலைக்குரியதாக பார்க்கப்படுகிறது.

வட கொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல்களை சமாளிக்கும் பொருட்டு அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் - தென் கொரியாவின் திறன் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் நோக்கில் கடந்த ஜுலையில் இருநாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

தென் கொரியாவிடம் அணு ஆயுதங்கள் இல்லை. வட கொரியா அணு ஆயுதங்களை பயன்படுத்த முயற்சித்தால், அதுவே கிம் ஆட்சியின் முடிவாக இருக்கும் என அமெரிக்க மற்றும் தென் கொரிய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# மைக்ரோ ஆர்.என்.ஏ. கண்டுபிடிப்புக்காக இருவருக்கு மருத்துவத்திற்கான நோபல்

மருத்துவத்துக்கான இந்த ஆண்டு நோபல் பரிசு விஞ்ஞானிகள் விக்டர் அம்ரோஸ் மற்றும் க்ரே ருவ்குன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஸ்டாக்ஹோமில் உள்ள நோபல் கொமிட்டி செயலாளர் நேற்று அறிவித்தார். மரபணு செல்பாட்டை ஒழுங்குபடுத்துவதில் முக்கியப் பங்காற்றும் மைக்ரோ ஆர்.என்.ஏ. என்ற சிறிய மூலக்கூறினைக் கண்டுபிடித்தற்காக விஞ்ஞானிகள் விக்டர் அம்ரோஸ் மற்றும் க்ரே ருவ்குன் ஆகியோருக்கு இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

அமெரிக்க உயிரியியலாளர்கள் இவர்கள் இருவரும் மைக்ரோ ஆர்.என்.ஏ. மற்றும் படியெடுத்தலுக்கு பின்பு மரபணு வெளிப்பாட்டை கட்டுப்படுத்துவதில் அதன் பங்களிப்பு ஆகியவற்றைக் கண்டுபிடித்தற்காக கூட்டாக உயரிய இந்த விருதினை பெறுகின்றனர்.

நோபல் கொமிட்டி, இவர்களின் கண்டுபிடிப்பு, உயிரினங்கள் எவ்வாறு உருவாகின்றன மற்றும் செயல்படுகின்றன என்பதை நிரூபிப்பதற்கான அடிப்படை முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன என்று தெரிவித்துள்ளது.

நமது உடலில் உள்ள அனைத்து உயிரணுக்களும் ஒரே மரபணு மூலக்கூறுகளைக் கொண்டிருந்தாலும், தசைகள் மற்றும் நரம்புகள் போன்ற பல்வேறு வகையான



செல்கள் பல்வேறு வகையான செயல்களைச் செய்கின்றன. மரபணு ஒழுங்குமுறை செயல்படுகள் மூலம் இது சாத்தியமாகிறது. அப்போது இந்த செல்கள் அவற்றுக்குத் தேவையான மரபணுவை மட்டும் செல்படுத்த அனுமதிக்கப்படுகின்றன.

அம்ரோஸ் மற்றும் ருக்குன் ஆகியோரது மைக்ரோ ஆர்.என்.ஏ. கண்டுபிடிப்பு, இந்த செயல்பாட்டின் போது புதிய வழியை வெளிப்படுத்தியது. அவர்களது கண்டுபிடிப்புகள் உயிர்கள், குறிப்பாக மனித உயிர்கள் எவ்வாறு உருவாகின்றன மற்றும் செயல்படுகின்றன என்பதை புரிந்துகொள்ள முக்கிய பங்காற்றுகின்றன என்று நோபல் கொமிட்டி தெரிவித்துள்ளது.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 08/10/2024

## கனடாவில் மதுபானம் களவாடிய பொலிஸ் உத்தியோகத்தர் கைது

கனடாவின் ரொறன்ரோ பகுதியில் மதுபானம் களவாடிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மதுபான விற்பனை நிலையம் ஒன்றில் மூன்று போத்தல் 02




# கனடாவின் முக்கிய நகரங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது

**கனடாவின் முக்கிய நகரங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் தாக்குதல் நடத்தி ஓராண்டு பூர்த்தியாகின்றது.**

**இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல்வேறு நிகழ்வுகள் கனடாவின் நகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.**

**தாக்குதல் சம்பவத்தில் 1200 இஸ்ரேலிய பிரஜைகள் கொல்லப்பட்டதுடன் 240 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டு இருந்தனர்.**

இதன் பின்னர் இஸ்ரேல் காசா மீது நடத்திய தாக்குதல்களில் இது வரையில் 41000 மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதுடன் சுமார் ஒரு லட்சம் பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் பலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும் கனடாவின் பிரதான நகரங்களில் பேரணிகள் நடத்தப்பட்டது.

ஹமாஸ் போராளிகள் பணய கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என இஸ்ரேல் ஆதரவு தரப்புகள் கோரும் அதேவேளை, போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என பலஸ்தீன ஆதரவு தரப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கனடாவின் முக்கிய நகரங்களில் இந்த போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனால் வழமைக்கு மாறாக கூடுதல் எண்ணிக்கையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.












# அகதிகளின் உரிமைகளை உறுதி செய்யவேண்டும்

## கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிப்பு

அகதி கோரிக்கையாளர்களின் அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கியூபிக் மாகாண முதல்வர் பிரான் கோயிஸ் லெகுலாட் அகதி கோரிக்கையாளர் விவகாரம் தொடர்பில் கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், பிரான்சில் நடைபெற்று வரும் மாநாடு ஒன்றில் பிரதமர் ட்ரூடோ பங்கேற்றுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் முதல்வர் லெகுலேட்டின் கருத்துக்கு பிரதமர் பதிலளித்துள்ளார்.

ஆக்கபூர்வமான விடயங்களை மேற்கொள்வதற்கும் மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்வதற்கும் தாம் இங்கு கூடி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

கியூபிக் மாகாண முதல்வரும் தற்பொழுது பிரான்சிக்கு விஜயம் செய்துள்ளார். மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என பிரதமர் ட்ரூடொ தெரிவித்துள்ளார்.

கியூபெக்கில் குடியேறியுள்ள அகதிகளை பலவந்தமாக வெளியேற்ற வேண்டும் என மாகாண முதல்வர் கோரி வருகின்றார். எனினும் இந்த கோரிக்கையை பிரதமர் நிராகரித்துள்ளார்.

# தற்கொலைக்கு உதவுவதை கொலையாக கருதமுடியாது

## கனடாவில் விசித்திர வழக்கு

கனடாவின் ஒன்றானியோ மாகாணத்தைச் சேர்ந்த கெனத் லோவ் என்ற நபர் தற்கொலைகருவிகளை இணைய வழியில் விற்பனை செய்தார் என குற்றம் சுமத்தி வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த இணைய வழி விற்பனையின் மூலம் ஒன்றாரியோ மாகாணத்தில் 14 பேர் கொல்லப்பட்டதுடன், சர்வதேச ரீதியில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இந்த தற்கொலை கருவிகளை பயன்படுத்தி உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான ஒரு பின்னணியில் மேற்படி நபருக்கு எதிராக கனடாவின் உச்ச நீதிமன்றத்தில் கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்தது.



தமக்கு எதிராக கனடிய சட்டத்தின் பிரகாரம் கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட முடியாது என குற்றம் சுமத்தப்பட்ட கெனத் லோவ் தெரிவித்துள்ளார்.

தனது சட்டத்தரணிகள் ஊடாக கொலை குற்றச்சாட்டுகளுக்கு சவால் விடுக்கும் வகையில் இடையீட்டு மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

தற்கொலைக்கு உதவுதல் கொலையாகாது என்ற அடிப்படையில் கெனத் லோவின் சட்டத்தரணிகள் வாதங்களை முன் வைத்துள்ளனர்.

மிகவும் சக்தி வாய்ந்த நச்சுப் பொருள்களை இந்த நபர் இணைய வழியில் விற்பனை செய்திருந்தார்.

மேற்படி நபர் சுமார் ஆயிரம் தற்கொலை கருவி பொதிகளை உலகம் முழுவதற்கும் விநியோகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விநியோகத்தின் ஊடாக சுமார் 130 பேர் கொல்லப்பட்டு இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதுபான வகைகளை மேற்படி நபர் களவாடியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

39 வயது டெனியல் என்ற போலிஸ் கான்ஸ்டபில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் மதுபான கடை ஒன்றுக்குள் புகுந்து மூன்று மதுபான போத்தல்களை எடுத்துக்கொண்டு பணம் செலுத்தாத அங்கிருந்து சென்று விட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

அந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக திருட்டு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அந்த நபர் 18 ஆண்டுகளாக பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து உடனடியாக அவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி அந்த பொலிஸ் உத்தியோகத்தர் நீதிமன்றில் முன்னிலையாக உள்ளார்.



# காய்கறிகள் சாப்பிடாததால் ஏற்படும் அரியவகை நோய்

## கனேடிய மருத்துவர்களுக்கு அறிவுறுத்தல்

பல நூறு ஆண்டுகளுக்கு முன் காணப்பட்ட அரிய வகை நோய் ஒன்றைக் குறித்து கவனம் செலுத்த கனேடிய மருத்துவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் சுவிஸ் சிறுவன் ஒருவன் கடுமையான முதுகு வலி மற்றும் கால் வலியால் அவதியுற்று ஜெனீவா பல்கலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவர்கள் அவனுக்கு தொற்று நோய் அல்லது மரபியல் நோய் ஏதாவது உள்ளதா என பரிசோதித்தார்கள். அப்படி ஒரு பிரச்சினையும் அவனுக்கு இல்லை என்பது தெரியவந்தது.

அவனது கால் மூட்டுக்கள் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவனுக்கு பழங்கால நோயான ஸ்கர்வி என்னும் நோய் இருக்கக்கூடுமா என சந்தேகித்த மருத்துவர்கள், அவனை மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தினார்கள்.

மருத்துவர்கள் பரிசோதனையில் அந்த ஐந்து வயது சிறுவனுக்கு ஸ்கர்வி என்னும் நோய் இருப்பதை மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ஸ்கர்வி நோய் விட்டமின் சி குறைபாடு காரணமாக உருவாகும் பிரச்சினையாகும்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன் கப்பல்களில் நீண்ட காலம் பயணிக்கும் பணியாளர்கள் பலர் உயிரிழந்து வந்த நிலையில், அவர்களது எலும்புகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து, ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக அவர்களுக்கு ஸ்கர்வி பாதிப்பு ஏற்பட்டு, அதனால் அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சுவிஸ் சிறுவனும் காய்கறிகள் மற்றும் பழங்களை உண்ண மறுத்துவந்துள்ளார். ஆகவே, அவனுக்கு வைட்டமின் சி குறைபாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது, இந்த ஸ்கர்வி நோய் குறித்து கவனம் செலுத்த கனேடிய மருத்துவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

அதாவது, ஸ்கர்வி நோய், விட்டமின் சி குறைப்பாட்டால் ஏற்படும் ஒரு நோயாகும். ஆரஞ்சு வகை பழங்கள், பிரக்கோலி போன்ற காய்கறிகள், பசலைக்கீரை போன்ற கீரைகள் ஆகியவற்றில் வைட்டமின் சி போதுமான அளவில் உள்ளது.

கனடாவைப் பொருத்தவரை, உணவுத்தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், இந்த ஸ்கர்வி நோயால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

குறைந்த வருமானம் காரணமாக உணவைத் தவிர்ப்போர், சத்துள்ள உணவை உண்ணாமல், கடமைக்கு உண்ணுவோர், குறைந்த வருவாய் கொண்ட, தனியாக வாழும் முதியவர்கள் ஆகியோருக்கு இந்த ஸ்கர்வி பிரச்சினை ஏற்படும் வாய்ப்புள்ளது.

கடந்த ஆண்டு, ரொரன்றோ மருத்துவமனை ஒன்றில், 65 வயது பெண் ஒருவருக்கு ஸ்கர்வி கண்டறியப்பட்டது.

தனியாக வாழ்ந்துவரும் அவர், குடும்பத்தார் உதவி எதுவும் இல்லாததாலும், அதிகம் நடமாட முடியாததாலும், கேன்களில் அடைக்கப்பட்ட சூப், பதப்படுத்தப்பட்ட சீஸ், வெள்ளை பாண் ஆகியவற்றை மட்டுமே உட்கொண்டு வாழ்ந்துவந்துள்ளார்.

பச்சைக் காய்கறிகள், பழங்கள், கீரைகள் போன்ற உணவுகளை அவர் உட்கொள்ளவில்லை என்பது தெரியவந்தது.

ஆகவே, ஸ்கர்வி தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொண்ட Dr. Sally Engelhart என்னும் மருத்துவர், உணவுத் தட்டுப்பாடு என்னும் விடயம் அதிகரித்துவரும் நிலையில், கனடாவில் மருத்துவர்கள் இனி ஸ்கர்வி குறித்தும் கவனம் செலுத்தவேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

சரியான சிகிச்சையளிக்கப்படாவிட்டால், இந்த ஸ்கர்வி நோயால் உடலுக்குள் இரத்தக்கசிவு ஏற்பட்டு மரணம் கூட ஏற்பட வாய்ப்பு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

